**திருவள்ளூர் மாவட்டம் நிலஅளவை பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை**

*****

**முன்னிலை : திரு.செ.இராமச்சந்திரன்.**

**நக.அ3/912/2019** **நாள் 25.06.2019.**

**பொருள்** : பொதுப்பணி – நிலஅளவை பதிவேடுகள் துறை – திருவள்ளூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக நேரடி நியமனம் முறையில் அமைச்சுப்பணி இனத்தில் "இளநிலை உதவியாளர்" 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது - திரு.ஏ.மணிகண்டன், இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக

**பார்வை** :
1. தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.1162/PSD-H1/2019, நாள் 18.02.2019
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை நக.அ3/912/19, நாள் 09.03.2019
3. சென்னை-5 நிலஅளவை பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர் அலுவலக நக.ர2/38646/2018(நிஅ) நாள் 21.06.2019

****

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV-க்கு உட்பட்ட பணிகளின் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.ஏ.மணிகண்டன் என்பவருக்கு இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளினை அடிப்படையாக கொண்டு 11.03.2019 முப முதல் சென்னை உயர் நீதிமன்றம் / சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகறது.

பணிவரன்முறை செய்த நாள்முதல் தகுதிகாண் பருவம் துவங்கும் (Commencement of Probation) எனவும் உத்தரவிடப்படுகிறது.

உதவி இயக்குநர்
நிலஅளவை பதிவேடுகள் துறை
திருவள்ளூர்

**பெறுநர்** : திரு.ஏ.மணிகண்டன் இளநிலை உதவியாளர் - கண்காணிப்பாளர் 2 மூலமாக

**நகல்** : கூடுதல் இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, சென்னை-5 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
**நகல்** : மண்டல துணை இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, சென்னை-5 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
**நகல்** : கண்காணிப்பாளர் 1, 2 மற்றும் தொழில் நுட்ப மேலாளர்
**நகல்** : அ2, அ6, அ8 இருக்கைகள்
**நகல்** : உதவி இயக்குநர் மேசைக்கு